கூறியதன் காரணமாகவும், அதை ஏற்று அந்த இரண்டு நாட்களிலும் கேள்வி நேரத்தைத்தள்ளி வைப்பதென்றும், மேலும் பேரவை இரண்டு நாட்களிலும் மாலையிலும் அவைக் கூட்டத்தை வைத்துக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

24-2-1979 அன்று பேரவை ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும், 3-3-1979 அன்று காலை 10 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்— எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

25. தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்ற அதிகாரிகள் (இரண்டாவது திருத்த) சட்டத்தின் 2, 4, 5, 9 ஆம் பிரிவுகள் செயலுக்கு வரும் தேதியினை நிர்ணயிப்பது குறித்து, 11-7-1978ஆம் தேதியிடப்பெற்ற ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் அரசாணை எண் 1126-ல் வெளியான அறிவிப்பு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS